1972 சனவரி 28]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: பட்டியலில் போட்டிருந்தால் தான் இன்றைக்கு வரும். பட்டியலில் இல்லாததால், இன்றைக்கு அதை எடுத்துக் கொள்ளவில்லை. ஒத்திவைக்கும் கேள்விகள், நிகழ்ச்சி நிரல் தயார் செய்யும்போது, சேர்த்திருந்தால்தான் அது அவைக்கு வரும். ஆனால் கண்டிப்பாக பதில் வரும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி.

அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகள் மீது விவாதம் நடத்துவது குறித்து.

Dr. H. V. HANDE: Sir, on a point of order. During the meeting of the Business Advisory Committee, the hon. Member, Thiru Thangamani, wanted that the reports submitted to the Government should be discussed. The Hon. Speaker and the Hon. Chief Minister assured us that most of those reports can be discussed during the discussion on the Governor's Address. But the report relating to the incidents at the Annamalai University has not been placed . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐ ஆம் சாரி. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசவேண்டியதை இப்பொழுது ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு பேசுவது சரியில்லை. உறுப்பினரை இடத்தில் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்களை பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அல்லது அவையின் முன்னவர் அல்லது முதல் அமைச்சரிடம் சொல்லவேண்டும். அனுபவம் வாய்ந்த உறுப்பினர் இப்படி வரம்பு முறைகளைத் தெரிந்தவர்கள் எப்படி வேண்டுமானாலும் அவையின் இடத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்ல வருவது, பேரவையின் கவுரவத்திற்கும், தனி உறுப்பினருடைய கவுரவத்திற்கும் குறைவானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: I am not referring to the Business Advisory Committee . . .

Mr. SPEAKER: The hon. Member may resume his seat.

Dr. H. V. HANDE: Sir, how can we discuss the report when it is not placed on the table of the House?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இப்படிச் சொல்வதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் இந்த மாதிரி செய்தால், மன்றத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்கிறார்கள் என்ற முறையில், வருந்தத்தக்க முறையில் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்.

மன்றத்தின் விதிமுறைகளை, உரிமைகளைக் காப்பாற்றுவதில் கவலை இருக்கிறது எனக்கு. அதற்கான முறைகளும் இருக்கின்றன. மேலும் உறுப்பினர் இப்படிப் பேச விரும்பினால், மன்றத்தின் நடவடிக்கைகளை "அப்ஸ்ரக்ட்" பண்ணுகிறார்கள் என்று வேறு முறையில், எடுக்கக் கூடாத, விரும்பாத நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிவரும்.

3. ஒற்றி வைப்புத் தீர்மானங்கள்

(அ) ஆவடி டாங்க் தொழிற்சாலை தொழிலாளர் மீது காவல் துறையினர் தடியடி செய்ததாக கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சி, ஒற்றி வைப்புத் தீர்மானம். உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள், 42வது விதியின் கீழ் பேரவையின் மற்ற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டும் என்று கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

'மத்திய அரசு நிர்வாகத்தில் உள்ள ஆவடி டாங்க் பாக்டரியில் அமைதியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை எஸ். ஏ. பி. போலீசார் 27-1-72 அன்று தடியால் அடித்து படுகாயப்படுத்தி பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதால், பொது மக்களிடையே பதட்டமான நிலை உருவாகியிருப்பதால் பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோருகிறேன்'.

அதே மாதிரி, திரு. ஜேம்ஸ் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதோடு, என்னுடைய பெருமதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களும் ஒற்றிவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தார்கள். அதற்கும் ஒரு முறையிருக்கிறது. சபாநாயகர் வருவதற்கு முன்னால், பேரவைத் தலைவர் அறையிலே கொடுக்க வேண்டும். இப்பொழுது மன்றத்தில் ஐந்து நிமிஷத்திற்கு முன்பாகத்தான் அவர்கள் கொடுத்தார்கள். இருந்தாலும், மன்றத்திலே தாராளமாக நடந்து கொள்கிறோம். அவர்கள் கொடுத்த தீர்மானத்தையும் இதோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என்று அனுமதித்திருக்கிறேன். திரு. சுப்பையா அவர்களுடைய தீர்மானத்தில் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்துக் கொள்கிறேன். முதலிலே திரு. சுப்பையா அவர்கள் இது எப்படி அவசரமானது என்பதை விளக்க வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, ஆவடி டாங்கி பாக்டரியில் 4,500 பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களை நிர்வாகம் திடீரென்று வேலை நீக்கம் செய்வது, சஸ்பென்ட் செய்வது சார்ஜ் ஷீட் கொடுப்பது சம்பளப் பிடித்தம் செய்வது, அபராதம் விதிப்பது, மிரட்டுவது போன்ற சட்டத்திற்கு விரோதமான செய்கைகள் செய்வது காரணமாக, தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை